[திரு. கடம்பூர் ராஜூ] [2020 செப்டம்பர் 16

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஎ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2020), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், சொல்லுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும்,

---

@16–9–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 செப்டம்பர் 16] [திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்]

இளைஞர் அணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன். இன்றைக்கு, எங்களுடைய கொறடா அவர்கள் இந்த Bill பற்றிப் பேச வேண்டுமென்று கொடுத்தார்கள். அதில் சேர்மங்களுடனோ அல்லது இல்லாமலோ உள்ள பெட்ரோல்மீது 34 சதவிகிதம் வரி என்று விதித்தால் எவ்வளவு வரும் என்றும், 15 சதவிகிதம் வரி என்று விதித்தால் எவ்வளவு வரும் என்றும் இருந்தது. உடனே, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது ஞாபகம் வந்தது. என்ன இது வித்தியாசமான tax–ஆக இருக்கிறது; இதுபற்றி நான் பேச வேண்டுமென்று நினைத்தேன். 15 சதவிகிதம் விலை மதிப்பீட்டின்படியான வரி + per litre petrol உடன் ரூ.13.02 குறிப்பிட்ட வரி; அதிவேக டீசல் எண்ணெய்க்கு 25 சதவிகிதம் என்றிருந்ததை 11 சதவிகிதம் விலை மதிப்பீட்டின்படியான வரி + ரூ.9.62 குறிப்பிட்ட வரி. ஒன்றுமே புரியவில்லை. பின்னர், ஆழமாகச் சென்று பார்த்தால், இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், 34 சதவிகிதம் என்று tax விதித்தால், 20 ரூபாய் 12 பைசா மாநில வரியில் வருகின்றது. பின்னர் 15 சதவிகிதம் விதித்தால், 9 ரூபாய் 2 பைசா + 13 ரூபாய் 2 பைசாவைக் கூட்டினால் 22 ரூபாய் 4 பைசா வருகின்றது. அந்த 22 ரூபாய் 4 பைசாவில், இப்போது நடைமுறையில் இருக்கின்ற பழைய வரியான 20 ரூபாய் 12 பைசாவைக் குறைத்தால், ஒரு லிட்டருக்கு 1 ரூபாய் 92 பைசா ஏறியிருக்கிறது. அதாவது, 34 சதவிகிதத்தை 26 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறார்கள். டீசலை எடுத்துக்கொண்டால், 25 சதவிகிதம் விதித்தால், 14 ரூபாய் 25 பைசா மாநில வரியில் வருகின்றது. இப்போது 11 சதவிகிதம் விதித்தால் 6 ரூபாய் 66 பைசா + 9 ரூபாய் 62 பைசா விதித்தால், 16 ரூபாய் 28 பைசா ஆகிறது. அதை கூட்டிக் கழித்துப் பார்த்தால் 1 ரூபாய் 42 பைசா ஒரு லிட்டருக்கு ஏறுகிறது. 25 சதவிகிதத்தை 27.4 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 4–05

உலகத்திலேயே இதுபோன்று வரி போடக்கூடிய மிகவும் சிறந்த மாநிலம். இதை ஒருமுறை பாராட்டியே ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்காக இதைச் சொல்ல வருகிறேன் என்றால், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் துணை மதிப்பீடுகளைப் படித்தபோது, 3,359.12 கோடி ரூபாய் கொரோனா நோய்த் தொற்றினால் பொது விநியோக அமைப்புமூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்குதல்

[திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்] [2020 செப்டம்பர் 16

மற்றும் பொது விநியோகக் கடைகளிலிருந்து வழக்கத்திற்கு அதிகமாக பொருட்கள் விற்கப்படுவதால் கூடுதல் தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்று கூறினார்கள். நீங்கள் வரி ஏற்றாமல் இருந்தால் இந்த 3,359 கோடி ரூபாய் செலவே நமக்கு ஆகியிருக்காது. எப்படியென்றால், டீசல் விலை ஏறியவுடன் automatic ஆக சரக்குகளின் போக்குவரத்துச் செலவுகளுக்கான வாடகை அதிகமாகும். எனவே, வியாபாரிகள் பொருட்களின் விலையை ஏற்றத்தான் செய்வார்கள். ஆகவே, தயவுசெய்து, என்னுடைய request என்னவென்றால், இந்தச் சமயத்தில், நீங்கள் இந்த வரிவிதிப்பை கண்டிப்பாக விதிக்கக் கூடாது; ஏற்றக் கூடாது. இந்தச் சட்டமுன்வடிவை கண்டிப்பாக நீங்கள் திரும்பப்பெற்றே ஆக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெட்ரோல், டீசல் விலையைப் பற்றியது என்பதால் ஒரேயொரு விஷயத்தை மட்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். பெட்ரோல், டீசலுக்கு crude oil தான் அடிப்படை என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். Crude oil-ன் விலையைப் பார்த்தீர்களென்றால், 2011-ல் ரூ.94.88 ஆகவும், 2012-ல் ரூ.94.05 ஆகவும், 2013-ல் ரூ.97.98 ஆகவும், 2014-ல் ரூ.93.17 ஆகவும், 2015-ல் ரூ.48.66 ஆகவும், 2016-ல் ரூ.43.29 ஆகவும், 2017-ல் ரூ.50.80 ஆகவும், 2018-ல் ரூ.65.25 ஆகவும், 2019-ல் ரூ.56.99 ஆகவும், 2020-ல் ரூ.38.55 ஆகவும் இருந்தது. 2014 ஆம் ஆண்டு 93.17 ரூபாயாக crude oil-ன் விலை இருந்தபோது, டீசலின் விலை 72 ரூபாயாக இருந்தது. 39 ரூபாயாக crude oil-ன் விலை இருக்கும்போது, பெட்ரோலின் விலை 85 ரூபாயாக இருக்கிறது. 74 ரூபாயாக இருந்த டீசலின் விலை 85 ரூபாயாக இருக்கிறது; Crude oil-ன் விலை குறையக் குறைய பெட்ரோல் விலையும், டீசல் விலையும் ஏறுகிற ஒரே நாடு இந்தியாதான். உலகத்திலேயே வேறு எங்கும் இதுபோன்ற சூழ்நிலை கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முக்கியமாக ஒரு கருத்தை நான் பதிவு செய்தாக வேண்டும். கொரோனா வைரஸ் தொற்று சமயத்தில், மார்ச் மாதத்தில் பெட்ரோலின் விலை ரூ. 74.79 இருந்தது; 5 மாதங்களுக்குப் பிறகு அதன் விலை ரூ.85.74 ஆக இருக்கிறது; டீசல் விலை ரூ.65.61 ஆக இருந்தது, இந்த 5 மாதங்களுக்குப் பிறகு ரூ.78.75 ஆக இருக்கிறது. எங்களுடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி கட்சி ஆட்சியில் இருந்தபோது, 50 பைசா ஏற்றுவார்கள், 75 பைசா ஏற்றுவார்கள், அதையும் யோசித்து, யோசித்து ஏற்றுவார்கள்.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், முடியுங்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: முடித்துவிடுகிறேன். யோசித்து, யோசித்து விலையை ஏற்றுவார்கள். இந்த ஐந்தே மாத காலத்தில் பெட்ரோலுக்கு 11 ரூபாயும், டீசலுக்கு 13 ரூபாயும் ஏற்றிய இந்த மோசமான ஆட்சியைக் கண்டிப்பாக நாம் கண்டித்தே ஆக வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினாலும் சரி; தீர்மானம் போட்டாலும் சரி. இதுமாதிரி பொதுமக்களுடைய வாழ்வாதாரத்தை அழிக்கிற வகையில் தினம், தினம் ஒரு விலையை ஏன் நிர்ணயம் செய்கிறீர்கள்? 10 வருடங்களுக்கு முன்பு அதுபோன்று செய்யவில்லையே? தினம், தினம் ஒரு விலையை நிர்ணயம் செய்கிறது மத்திய அரசாங்கம். இதை கண்டிப்பாக கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகச் சந்தையிலே கச்சா எண்ணெய் விலை குறைந்திருந்தாலும்கூட, தற்போதைய சூழ்நிலை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது தெளிவாகத் தெரிவித்தார்கள். கொரோனா நோய்த் தொற்று காரணமாக தற்போது இந்தியா முழுவதும் வருவாயைப் பொறுத்தமட்டில் மிகவும் பின்தங்கி இருக்கின்ற காரணத்தால், மாநிலத்தில் இருக்கக்கூடிய வருவாய் இழப்பீட்டைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலேதான் இந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கருத்துகளை, ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2020 செப்டம்பர் 16

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 4–10

14. கலைவாணர் அரங்கத்தில் பேரவைக் கூட்டம் நடைபெற சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தமைக்கு பேரவைத் தலைவர் நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் பேரவைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அரசிடமிருந்து பேரவைக் கூட்டத் தொடர் அறிவிப்பிற்கான கோப்பு வருவதற்கு ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த இடத்தில் பேரவைக் கூட்டத்தை நடத்தலாம் என்பது குறித்து விவாதித்து, கலைவாணர் அரங்கத்தில் நடத்தலாம் என முடிவு செய்து, அறிவித்த நாளிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தார்கள்.

தலைமைச் செயலகத்தில் உள்ள பேரவை மண்டபம் போன்றே இங்கேயும் அந்த உணர்வோடு மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்து பங்குகொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதோடு, கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை 100 சதவிகிதம் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

கொரோனா test செய்து, negative result–ஐக் காண்பித்து, இந்த மண்டபத்தில் நுழைவதற்குண்டான அனுமதி அட்டையை ஒவ்வோர் உறுப்பினரும் அணிந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, முதலமைச்சரும் அந்நடைமுறையை கடைப்பிடித்ததற்கு என்னுடைய பாராட்டுகள்.